**டிசம்பர் – 20**

# TNPSC துளிகள்

- கம்பி வடம் சாராத விரிவலை சேவை, கிராமப்புற 5G இணைப்பு மற்றும் தொலைத் தொடர்பு கல்விக்கானப் பங்களிப்புகளுக்காக முதலாவது இந்திய நிறுவனமாக C-DOT, 2025 ஆம் ஆண்டிற்கான IEEE (மின் மற்றும் மின்னணுப் பொறியாளர்கள்) SA பெரு நிறுவன விருதைப் பெற்றது.
- ஏகதா 2025 என்பது இந்தியக் கடற்படைக்கும் மாலத்தீவு தேசியப் பாதுகாப்புப் படைக்கும் இடையே மாலத்தீவில் நடைபெற்ற 8வது ஆண்டு இருதரப்பு கடல் சார் பயிற்சியாகும்.
- குவாண்டம் பல் கட்டமைப்புகள் மற்றும் குவாண்டம் தகவல் அறிவியலின் கோட்பாட்டிற்கான பங்களிப்புகளுக்காக டைட்டாஸ் சந்தா மற்றும் ஸ்திதாதி ராய் ஆகியோருக்கு 2025 ஆம் ஆண்டிற்கான சர்வதேசக் கோட்பாட்டு இயற்பியல் மையப் (ICTP) பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஆனது, இந்தியாவில் முதல் முறையாக மத்தியப் பிரதேச மாநிலத்தில் NH-45 நெடுஞ்சாலையில் வன விலங்குகளுக்குப் பாதுகாப்பான வகையான சாலையைத் திறந்து வைத்து ள்ளது.
- ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி (IAS) இராஜ் குமார் கோயல் மத்தியத் தகவல் ஆணையத்தின் (CIC) தலைமை தகவல் ஆணையராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- பதஞ்சலி பல்கலைக்கழகம், கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் ஞான பாரதம் திட்டத்தின் கீழ், இந்தியாவின் முதல் யோகா மற்றும் ஆயுர்வேத அடிப்படையிலான தொகுப்பு மையமாக நியமிக்கப்பட்டுள்ளது.
- நாட்டின் மிக உயரிய குடிமை விருதான எத்தியோப்பியாவின் நிஷான் என்ற கிரேட் ஹானர் விருதைப் பெற்ற முதல் உலகத் தலைவர் என்ற பெருமையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பெற்றுள்ளார்.
- இந்திய இரயில்வே நிர்வாகமானது, 25 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் அதன் அகலப்பாதை வலையமைப்பின் 99 சதவீதத்திற்கும் அதிகமான பாதைகளின் மின்மயமாக்கல் நடவடிக்கையை நிறைவு செய்து உள்ளது.
    - 2019 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், சுமார் 33,000 கிலோ மீட்டருக்கும் மேற்பட்ட பாதை மின்மயமாக்கப்பட்டது.
- பெங்களூரு பன்னேர்கட்டா உயிரியல் பூங்கா, விலங்குப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் தென்னாப்பிரிக்காவிலிருந்து எட்டு வெளிர் முகம் கொண்ட கபுச்சின் குரங்குகளை இறக்குமதி செய்தது.
    - சபாஜஸ் அப்பெல்லா என்று அறிவியல் பூர்வமாக அழைக்கப்படும் இந்த குரங்குகள், அந்தப் பூங்காவில் மரபணு பன்முகத்தன்மை, இனப்பெருக்கத் திட்டங்கள் மற்றும் நடத்தை மேம்பாட்டினை மேம்படுத்தும்.
- பாலியல் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் வன்முறை மற்றும் மனித உரிமை

மீறல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி, பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தினம் ஆனது 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் தேதி அன்று அனுசரிக்கப் படுகிறது.

# தேசியச் செய்திகள்

## ஆஜீவிகா திட்டம் (கிராமியம்) மசோதா, 2025




- இந்த மசோதாவானது, சுமார் இருபது ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த 2005 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டத்திற்கு (MGNREGA) மாற்றாக முன் வைக்கப்பட்டுள்ளது.
- விக்ஸித் பாரத் 2047 (வளர்ச்சி பெற்ற இந்தியா) தொலைநோக்குக் கொள்கையுடன் ஒருங்கிணைந்த நவீன காலச் சட்டத்தை உருவாக்குவதற்காக மத்திய வேளாண்துறை அமைச்சரால் இது அறிமுகப்படுத்தப்பட்டது.
- திறம் சாரா உடல் உழைப்பைச் செய்யும் வயது வந்தோருக்கு, கிராமப்புறக் குடும்பத்திற்கு வழங்கப்படும் உத்தரவாதமான கூலி சார் வேலைவாய்ப்பு ஆனது 100 நாட்களில் இருந்து 125 நாட்களாக அதிகரிக்கப்படுகிறது.
- MGNREGA திட்டத்தின் கீழ், இந்தச் சட்டம் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பு உத்தரவாதம் அளிக்கிறது, மேலும் வறட்சியின் போது அல்லது சில பழங்குடிப் பகுதிகளுக்கு மட்டுமே கூடுதல் நாட்கள் அனுமதிக்கப்பட்டன.
- இந்த மசோதா முக்கிய விதைப்பு காலம் மற்றும் அறுவடைக் காலங்களில் 60 நாட்கள் அளவிலான வேளாண் நடவடிக்கை இடைநிறுத்தத்தை அறிமுகப்படுத்துகிறது.
- வேளாண்சார் இடைநிறுத்தத்தின் நோக்கம் வேளாண் நடவடிக்கைகளுக்கு தொழிலாளர் வளம் கிடைப்பதை உறுதி செய்வதாகும்.
- MGNREGA திட்டத்தின் கீழ், மத்திய அரசு 100 சதவீத திறம் சாரா கூலியையும், 75 சதவீதப் பொருள் செலவுகளையும் செலுத்தியது, இதன் விளைவாக 90:10 பங்கிலான மத்திய - மாநில நிதி முறை உருவானது.
- புதிய திட்டம் வடகிழக்கு மற்றும் இமயமலை மாநிலங்களுக்கு 90:10 பங்கிலான நிதி உதவியுடன், பிற மாநிலங்களுக்கு 60:40 நிதியுதவியுடன், சட்டமன்றங்கள் இல்லாத ஒன்றியப் பிரதேசங்களுக்கு 100 சதவீத மத்திய அரசின் நிதியுதவியுடன் மத்திய

அரசின் நிதியுதவி பெறும் திட்டமாக (CSS) செயல்படுகிறது.

- தேவை அடிப்படையிலான, பொதுவான MGNREGA, தேவையின் அடிப்படையில் நிதி ஒதுக்கீட்டினை அதிகரிக்க அனுமதித்தது.
- புதிய மசோதா, அதன் அமலாக்கத்திற்காக ஒரு மாநிலத்தில் குறிப்பிட்ட கிராமப்புறப் பகுதிகளை மத்திய அரசு அறிவிக்க அனுமதிக்கிறது.
- இந்த மசோதா, விக்ஸித் பாரத் தேசிய கிராமப்புற உள்கட்டமைப்பு அடுக்கை உருவாக்குவதை கட்டாயமாக்குகிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள அனைத்துப் பணிகளும் இந்த ஒற்றைத் தேசிய உள் கட்டமைப்பு கட்டமைப்பின் கீழ் ஒன்றிணைக்கப்படும்.
- இந்தக் கட்டமைப்பு விக்சித் கிராமப் பஞ்சாயத்து திட்டங்களை பிரதான் மந்திரி (பிரதமர்) கதி சக்தி தேசிய பெருந்திட்டத்துடன் ஒருங்கிணைக்கிறது.
- பணிகள் ஆனது நீர்ப் பாதுகாப்பு, முக்கிய கிராமப்புற உள்கட்டமைப்பு, வாழ்வாதாரம் தொடர்பான உள்கட்டமைப்பு மற்றும் பேரிடர் தணிப்பு ஆகிய நான்கு பகுதிகளாக தொகுக்கப் பட்டுள்ளன.
- இந்த மசோதா தொழிலாளர்களுக்கு உயிரியளவியல் சார் வருகைப் பதிவை கட்டாயமாக்குகிறது.
- இது செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான மோசடி கண்டறிதல், புவியிடங் காட்டி அமைப்பு (GPS) சார்ந்த பணியிடக் கண்காணிப்பு மற்றும் திட்டத்தின் தரவை வாராந்திர அடிப்படையில் வெளியிடுதல் ஆகியவற்றையும் சட்டப்படியாக கட்டாயம் ஆக்குகிறது.

## தாமரை விதைகள் உற்பத்தி





- உலகின் தாமரை விதைகளில் ((மக்கானா) கிட்டத்தட்ட 80 சதவீதத்தினை இந்தியா உற்பத்தி செய்கிறது என்பதோடு இது நரிக் கொட்டை அல்லது கோர்கன் கொட்டை என்றும் அழைக்கப் படுகிறது.
- மக்கானா என்பது குளங்கள் மற்றும் ஈரநிலங்களில் வளரும் யூரியால் ஃபெராக்ஸ்

எனும் ஒரு நீர்வாழ் தாவரத்தின் உண்ணக் கூடிய வகையிலான விதையாகும்.

- இதில் தர்பங்கா ஒரு முக்கியச் சாகுபடி மற்றும் பதப்படுத்துதல் மையமாக உள்ளதுடன் இந்தியாவின் மக்கானா உற்பத்தியில் பீகார் சுமார் 85% பங்களிக்கிறது.
- ஓர் உழைப்பாளர் தேவை மிகுந்த நீர்வாழ் பயிரான இது, விவசாயிகள் மற்றும் மீனவர் சமூகங்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது.
- சத்துக்கள், புரதம், நார்ச்சத்து, ஆக்ஸிஜனேற்றிகள் நிறைந்த மக்கானா, குறைந்த கிளைசெமிக் கொண்டது மற்றும் இருதய நலத்திற்கு உகந்தது.
- மதிப்புக் கூட்டல், ஏற்றுமதி மற்றும் உலகளாவியச் சந்தை அணுகலை அதிகரிக்க அரசாங்கம் தேசிய மக்கானா வாரியத்தை அமைத்து 476.03 கோடி ரூபாய் திட்டத்திற்கு (2025–31) ஒப்புதல் அளித்துள்ளது.

## தேசிய டிஜிட்டல் கால்நடைத் திட்டம்





- தேசிய டிஜிட்டல் கால்நடை திட்டம் (NDLM) ஆனது இந்திய அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத் துறையால் தொடங்கப்பட்டது.
- நாடு முழுவதும் கால்நடைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளின் நாடு தழுவிய டிஜிட்டல் தரவுத் தளத்தை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- இது அனைத்து மாநிலங்களிலும் உள்ள கால்நடை விலங்குகளுக்குப் பசு ஆதார் எனும் 12 இலக்க தனித்துவமான அடையாள எண்ணினை வழங்குகிறது.
- இந்தத் திட்டம் இனங்களின் தரத்தை மேம்படுத்துகிறது என்ற ஒரு நிலையில், நோய்க் கண்காணிப்பை வலுப்படுத்தி மற்றும் கால்நடை துறை சார் பொருட்களின் தடமறிதலை உறுதி செய்கிறது.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி, 35.96 கோடி பசு ஆதார் எண்கள் மற்றும் 9.5

கோடி கால்நடை உரிமையாளர்கள் NDLM திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

- NDLM ஆனது, விவசாயிகளுக்கு சேவைகள் மற்றும் தகவல்களை வழங்குவதற்காக பாரத் பசுதான் அமைப்பு மற்றும் 1962 கால்நடை உரிமையாளர் செயலி மூலம் செயல்படுகிறது.

## சப்கா பீமா சப்கி ரக்சா மசோதா 2025

- மக்களவை ஆனது 2025 ஆம் ஆண்டு சப்கா பீமா சப்கி ரக்சா (காப்பீட்டுச் சட்டத் திருத்தம்) மசோதாவினை நிறைவேற்றியது.
- இந்த மசோதா காப்பீட்டுச் சட்டம், 1938, ஆயுள் காப்பீட்டுக் கழகச் சட்டம், 1956 மற்றும் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையச் சட்டம், 1999 ஆகியவற்றைத் திருத்தியமைக்கிறது.
- இது காப்பீட்டுத் துறையின் வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் காப்பீட்டுக் கொள்கை மேற்கொள்பவர்களுக்கான பாதுகாப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மசோதா நடைமுறையை எளிதாக்குதல், வெளிப்படைத்தன்மை மற்றும் காப்பீட்டில் ஒழுங்குமுறை மேற்பார்வை ஆகியவற்றை மேம்படுத்த முயல்கிறது.
- அரசாங்கம் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களில் 17,000 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்துள்ளது மற்றும் அந்நிய நேரடி முதலீட்டு (FDI) வரம்புகளை அதிகரித்து உள்ளது.
- இந்த மசோதா பிரதான் மந்திரி (PM) ஜீவன் ஜோதி பீமா யோஜனா மற்றும் பிரதான் மந்திரி சுரக்சா பீமா யோஜனா போன்ற திட்டங்கள் மூலம் ஒரு பரந்த காப்பீட்டுத் திட்டத்தை ஆதரிக்கிறது.




# சர்வதேசச் செய்திகள்

## தியாஞ்சின் பிரகடனம் (2025)

- சீனாவின் தியான்ஜினில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஷாங்காய் ஒத்துழைப்பு

அமைப்பின் (SCO) உச்சி மாநாட்டில் இந்தப் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.


- இது பாதுகாப்பு, மேம்பாடு, தொழில்நுட்பம் மற்றும் நிறுவன சீர்திருத்தங்கள் குறித்து SCO உறுப்பினர்களின் பொதுவான நிலைப்பாடுகளை நிர்ணயிக்கிறது.
- செயற்கை நுண்ணறிவை (AI) உருவாக்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் அனைத்து நாடுகளின் சம உரிமைகளையும் இந்தப் பிரகடனம் ஆதரிக்கிறது.
- AI அமைப்புகளில் பாதுகாப்பு, வெளிப்படைத்தன்மை, நியாயத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்ய SCO உறுப்பினர் நாடுகள் ஒப்புக்கொண்டன.
- இது SCO AI ஒத்துழைப்பு செயல் திட்டம் மற்றும் துஷான்பேயில் ஒரு பிராந்திய AI மையத்தினை அமைப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை (UNGA) முன்மொழிவை ஆதரிக்கிறது.




## தொற்றா நோய்கள் மற்றும் மன ஆரோக்கியம் குறித்த ஐ.நா. பிரகடனம்

- தொற்றா நோய்கள் (NCDs) மற்றும் மன ஆரோக்கியத்தை கூட்டாக உள்ளடக்கிய முதல் உலகளாவிய பிரகடனத்தை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஏற்றுக் கொண்டது.
- இந்தப் பிரகடனம் 2030 ஆம் ஆண்டிற்கான தெளிவான இலக்குகளை நிர்ணயித்து, NCD ஆனது வாய்வழிச் சுகாதாரம், நுரையீரல் சுகாதாரம் மற்றும் குழந்தைப் பருவப் புற்றுநோய் போன்றவற்றையும் உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்துகிறது.
- காற்று மாசுபாடு, சுத்தமான சமையல், ஈய மாசுக் கலப்பு, மிகவும் அபாயகரமான இரசாயனங்கள் மற்றும் டிஜிட்டல் சுகாதாரப் பாதிப்புகள் போன்ற புதிய ஆபத்துக் காரணிகள் இதில் அடங்கும்.
- புகையிலை, ஆரோக்கியமற்ற உணவுகள், டிரான்ஸ் கொழுப்புகள் (மாறுபக்க கொழுப்பு) மற்றும் மின்னணு சிகரெட்டுகள் ஆகியவற்றினை அரசாங்கத்தின் முழுப் பங்களிப்புடன் வலுவாகக் கட்டுப்படுத்த இது அழைப்பு விடுக்கிறது.

- NCD ஆனது ஆண்டுதோறும் சுமார் 18 மில்லியன் அளவிற்கு முன்கூட்டிய மரணங்களை ஏற்படுத்துகின்றன என்பதையும், மனநலப் பாதிப்புகள் என்பவை உலகளவில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்களைப் பாதிக்கின்றன என்பதையும் இப்பிரகடனம் எடுத்துக் காட்டுகிறது.




# பொருளாதாரச் செய்திகள்

## சஹாகர் சாரதி





- இந்திய அரசானது, கிராமப்புறக் கூட்டுறவு வங்கிகளை (RCBs) தொழில்நுட்பம் சார்ந்த

சேவைகளுடன் நவீனமயமாக்குவதற்காக என்று சஹாகர் சாரதி எனும் ஒரு பகிரப் பட்ட (ஒருங்கிணைந்த) சேவை நிறுவனத்தினைத் தொடங்கியது.

- சஹாகர் சாரதி ஆனது இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதலுக்குப் பிறகு 2025 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் தேதியன்று பதிவு செய்யப்பட்டது.
- இது தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (NABARD), தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் மற்றும் பங்கேற்கும் RCB ஆகியவற்றின் இடையே சமப் பங்குகளுடன் 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான அங்கீகரிக்கப்பட்ட ஒரு மூலதனத்தைக் கொண்டுள்ளது.
- இந்த நிறுவனம் மைய வங்கித் தீர்வுகள் (CBS), ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) மற்றும் ஆதாருடன் இயக்கப்பட்ட பண வழங்கீட்டு முறை (AePS) போன்ற டிஜிட்டல் கட்டணத் தளங்கள், இணையவெளிப் பாதுகாப்பு ஆதரவு மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆளுகை ஆகியவற்றை வழங்குகிறது.
- கிராமப்புறக் கூட்டுறவு வங்கிகளில் வாடிக்கையாளர் அணுகல், செயல்பாட்டுத் திறன் மற்றும் நவீன வங்கித் தொழில்நுட்பத்தை ஏற்றுக் கொள்வதை மேம்படுத்துவதை சஹாகர் சாரதி நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசிய கணக்குகளுக்கான அடிப்படை ஆண்டு திருத்தம்





- "செலவின அணுகுமுறையைப் பயன்படுத்தி தேசிய கணக்குகளின் தொகுப்புகளைத் தொகுப்பதில் வழிமுறை மேம்பாடுகள்" என்ற தலைப்பில் புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ஒரு விவாத அறிக்கையை வெளியிட்டது.
- தேசிய கணக்குப் புள்ளி விவரங்களின் புதிய தொடர் ஆனது 2022–23 ஆம் நிதியாண்டை (FY) அடிப்படை ஆண்டாகப் பயன்படுத்தும்.
- திருத்தப்பட்ட தரவுத் தொடர் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 27 ஆம் தேதியன்று வெளியிடப் படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
- தரவு மூலங்கள் மற்றும் முறைகளில் மேம்பாடுகளை வழி நடத்துவதற்காக தேசிய

கணக்குகளின் புள்ளி விவரங்கள் (ACNAS) குறித்த ஆலோசனைக் குழு அமைக்கப் பட்டு உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நீரிழிவு விழித்திரை நோய்க்கான AI அடிப்படையிலான பரிசோதனைத் திட்டம்

- இந்தியா தனது முதல் செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த சமூகப் பரிசோதனை திட்டத்தை புது டெல்லியில் தொடங்கியது.
- இந்தத் திட்டம், விழித்திரை படங்களை தானாகச் சரிபார்த்து, வகைப்படுத்தி, வரிசைப் படுத்த, AIIMS நிறுவனத்தின் RPC மையத்தினால் (டாக்டர் இராஜேந்திர பிரசாத் கண் அறிவியல் மையம்) உருவாக்கப்பட்ட MadhuNetrAI எனும் இணைய அடிப்படையிலான செயற்கை நுண்ணறிவு அமைப்பினைப் பயன்படுத்துகிறது.
- இந்தச் சோதனைத் திட்டம் ஆனது, நகரங்கள், கிராமங்கள், மலைப் பகுதிகள், கடலோர மற்றும் தொலைதூரப் பகுதிகளை உள்ளடக்கும் வகையில் புனா, மும்பை, பெங்களூரு, தர்மசாலா, கயா, ஜோர்ஹாட் மற்றும் கொச்சி ஆகிய ஏழு இடங்களில் மேற்கொள்ளப்படுகிறது.
- நீரிழிவு விழித்திரை நோய்ப் பாதிப்புள்ள நோயாளிகள் முறையான நீரிழிவு சிகிச்சைக்காக அனுப்பப்படுகிறார்கள், மேலும் கடுமையான பாதிப்புள்ளவர்கள் மாவட்ட மருத்துவமனைகளில் கண் நிபுணர்களிடம் சிகிச்சை பெற பரிந்துரைக்கப் படுகின்றனர்.
- இந்தத் திட்டம் இந்தியா முழுவதும் நோய்களை மேலாண்மை செய்வதில் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்துவதற்கான ஒரு மாதிரியாக உருவாகி செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது.




## RESPOND தொகுப்பு 2025

- இது விண்வெளித் துறையின் (DoS) கீழ் இஸ்ரோவால் வெளியிடப்பட்டது.
- இது இஸ்ரோவின் தற்போதைய மற்றும் எதிர்கால விண்வெளிப் பயணங்களுடன் இணைக்கப் பட்ட பணி சார்ந்த ஆராய்ச்சிகளில் உள்ள சிக்கல்களின் பட்டியல் ஆகும்.
- இந்தத் திட்டம் இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சித் திட்டங்களை வரவேற்கிறது.
- கல்வி ஆராய்ச்சியை தேசிய விண்வெளி தொழில்நுட்பத் தேவைகளுடன்


இணைப்பதே இதன் நோக்கம் ஆகும்.

- திட்டம் குறித்த முன்மொழிவுகளை I-GRASP (ISRO–ஆராய்ச்சி மற்றும் ஆதரவு திட்டங்களுக்கான மானிய அமைப்பு) வலைதளம் மூலம் இயங்கலையில் சமர்ப்பிக்க வேண்டும்.




# மாநிலச் செய்திகள்

## வெண்புள்ளி நோய் - ஆந்திரப் பிரதேசம்




- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள இறால் பண்ணைகளில் வெண்புள்ளி நோய் பாதிப்பு கண்டறியப் பட்டுள்ளது.
- இது வளர்ப்பு இறாலில் பரவும் மிகவும் ஆபத்தான வைரஸ் தொற்று ஆகும்.
- இது வெண்புள்ளி நோய்க்குறி வைரஸ் (WSSV) எனப்படும் வைரஸால் ஏற்படுகிறது.
- இந்த வைரஸ் நண்டுகள் மற்றும் சிங்கி இறால் போன்ற பிற ஓடுடைய மீன்களையும் பாதிக்கக் கூடியது.
- இந்தப் பாதிப்பு முதன்முதலில் தைவானில் (1992) பதிவாகி, பின்னர் ஆசியா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் பிற இறால் உற்பத்தி செய்யும் பகுதிகளுக்கு பரவியது.

## சிக்கிமில் போர்க் களச் சுற்றுலா

- சிக்கிமில் சோ-லா மற்றும் டோக்-லா ஆகியவை பாரத் ரன்பூமி தரிசன முன்னெடுப்பின் கீழ் சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்கு அனுமதிக்கப் பட்டுள்ளன.
- டோக்-லா (டோக்லாம்) இந்திய-சீனா-பூடான் முச்சந்திப்புக்கு அருகிலுள்ள சும்பிப் பள்ளத்தாக்கில் 13,780 அடி உயரத்தில் அமைந்துள்ளது என்பதோடு இங்கு 2017 ஆம் ஆண்டில் ஒரு இராணுவ மோதல் நடைபெற்றது.
- 17,780 அடி உயரத்தில் அமைந்துள்ள சோ-லா பகுதியில் 1967 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையே ஒரு மோதல் நடைபெற்றது.

- எல்லைப் பகுதிகள் சுற்றுலா மற்றும் உள்ளூர் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக எழுச்சிமிகு கிராமங்கள் திட்டத்தின் கீழ் இந்தத் தளங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.
- ஏற்கனவே சுற்றுலாத் தலமாக இருக்கும் நாது-லா, சிக்கிமில் ரன்பூமி தரிசன முன்னெடுப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள மற்றொரு தளமாகும்.




# இதரச் செய்திகள்

## பெட்ரா மற்றும் எல்லோரா குகைகளின் இரட்டை நகர ஒப்பந்தம்




- இந்தியாவும் ஜோர்டானும் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்களான பெட்ரா மற்றும் எல்லோரா குகைகளுக்கு இடையேயான இரட்டை நகர ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- எல்லோரா குகைகள் மகாராஷ்டிராவின் சரணந்திரி மலைகளில் இலகங்கா நதிக்கு அருகில் அமைந்துள்ளன.

- எல்லோரா குகைகள் இராஷ்டிர கூடர் மற்றும் யாதவர் வம்சத்தினரால் கி.பி 600 முதல் 1000 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்திற்கு இடையில் செதுக்கப்பட்டன.
- இதில் சுவரோவிய ஓவியங்களுடன் இந்து, பௌத்த மற்றும் சமண சமய நினைவுச் சின்னங்கள் உள்ளன.
- பெட்ரா குகைகள் இளஞ்சிவப்பு மணற்கல் பாறைகளில் செதுக்கப் பட்டிருப்பதால் ரோஸ் நகரம் என்றும் அழைக்கப்படுகிறது.
- பெட்ரா குகைகள் கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் நபடேயன் பேரரசின் தலைநகராக இருந்தது.
- பெட்ரா பகுதியளவு கட்டமைக்கப்பட்டு, பகுதியளவு பாறையில் செதுக்கப்பட்டுள்ளது என்பதோடு மலைகள், குறுகிய கடவுகள் மற்றும் பள்ளத்தாக்குகளால் இது சூழப்பட்டு உள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★